Journal of Modern Tamil Research; Vol. 7, No. 3; 2019; Page:125-131.

ISSN: 2321-984X

Published by Raja Publications

---

# தண்டனைக் கோட்பாடுகள்:

## சமூகவியல், மெய்யியல், இஸ்லாமியவியல் நோக்கு

**கலாநிதி எஸ்.எம். அய்யூப்,**
தலைவர், சமூகவியல் துறை
சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர்
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
0094769643899இ மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

விதிகளையும், சட்டங்களையும் மீறுவது குற்றமாகும். இதற்கான தண்டனை ஆளும் தரப்பினரால் அல்லது நீதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. குற்றங்களைக் கட்டுப்படுத்தி சமூகத்தின் இயல்பு நிலையைக் கட்டிக்காப்பதே தண்டனை வழங்கப்படுவதன் நோக்கமாகும். எனினும் தண்டனை வழங்கப்படுவதன் நோக்கம் தொடர்பாக பல்வேறுபட்ட பார்வைகள் புத்திஜீவித்துவ புலங்களில் நிலவுகின்றன. அத்தகைய பார்வைகளை இவ்வாய்வு முன்வைக்க முனைகின்றது. இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வு விபரண முறையில் தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்றது. தடுதண்டனை, பழிக்குப்பழி வாங்கும் தண்டனை, தடுத்தல் தண்டனை, சீர்திருத்த தண்டனை ஆகிய தண்டனைக் கோட்பாடுகளையும் அவை இஸ்லாமிய சிந்தனைகளோடு தொடர்புபடும் பாங்கையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

**திறவுச் சொற்கள்:** குற்றம், தடுதண்டனை, ஹுதூத் தண்டனை, த.்.ஸீர் தண்டனை

### அறிமுகம்

குற்றமும் அதனைக் கட்டுப்படுத்தும் பொறிமுறைகளில் ஒன்றான தண்டனையும் பெரும்பாலும் எல்லா சமூகங்களிலும் காணப்படும் நடைமுறைகளாகும். குற்றமற்ற சமூகம் என்பது வெறும் கற்பனாவாதமே என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகும். ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் கூட குற்றச் செயல்கள் காணப்படும் என தொழிற்பாட்டுவாதிகள் (Functionalists) சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஒரு சமூகத்தில் குற்றச் செயல்கள் காணப்படுவது தவிர்க்க முடியாத யதார்த்தமாகும். குற்றச் செயல்கள் எல்லை மீறும் போது சமூகத்தின் நியமங்கள், விழுமியங்கள் குன்றிப் போய் அச்சமூகமே அழிந்துவிடும் நிலைக்குச் சென்றுவிடுகின்றது. இத்தகைய சூழலில்தான் தண்டனையின் முக்கியம் உணரப்படுகின்றது. குற்றத்தினால் குலைந்துபோன சமூக ஒற்றுமை தண்டனையினால் மீளக் கொண்டுவரப்படுவதாக தொழிற்பாட்டுவாதிகள் கருதுகின்றார்கள்.

**01. குற்றம்**

"குற்றம் எனும் போது எழுதப்பட்ட சட்டங்களுக்கு முரணாக ஏதேனும் ஒரு நடத்தை அமையுமாயின் அந்நடத்தை குற்றமாகக் கருதப்படும். சமகால சமூகத்தில் எழுதப்படாத சட்டங்களை அல்லது சமூக நியமங்களால் எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகளை முரணுக்குள்ளாக்கும் எந்நடத்தையும் விலகலாகக் (Devience) கருதப்படுகின்றது. குற்றம் எனப்படுவது சட்டத்தினால் தடைசெய்யப்பட்டதும், தண்டனைக்குரியதாக கருதப்படும் விடயங்களும் ஆகும். குற்றம் என்பது ஒரு விலகல் நடத்தையாகும் எனினும் அனைத்து விலகல் நடத்தைகளும் குற்றங்களாகக் கருதப்படமாட்டாது. குற்றச் செயல்கள் என்பவை குற்றவியல் சட்டத்தை (Criminal law) மீறுகின்ற நடத்தையாவதுடன் அது தண்டப்பணம் விதிக்கப்படல், சிறைத்தண்டனை மற்றும் மறைமுகமாக தடைகள் விதிக்கப்படல் போன்றவற்றினால் தண்டிக்கப்படக் கூடிய நடத்தைகளுமாகும்" (சிபானி, 2010).

சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில் சட்டத்திற்கு புறம்பாகத் தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கு எதிராகவோ செய்யப்படுவது குற்றம் எனப்படும். சட்டத்தால் தண்டிக்கப்படும் நடத்தையைக் குற்றம் எனலாம் (சிங்காரவேலன், 2001).

சமூகவியலைப் பொறுத்தவரையில் குற்றமானது அகவயத்தன்மை கொண்டதாக காணப்படுகிறது. குற்றத்தைத் தீர்மானிப்பதில் மத, சமூக பண்பாட்டுக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒவ்வொரு குற்றமும் ஏதோ ஒரு வகையில் சமூகத்தின் நியமங்களையும், விழுமியங்களையும் மீறுவனவாகவே காணப்படுகின்றது. கருக்கலைப்பை சில சமூகங்கள் குற்றச் செயலாகவும் சில சமூகங்கள் ஏற்கப்பட்ட செயலாகவும் கருதுகின்றது. இன்னும் சில சமூகங்கள் கருக்கலைப்பை தடை செய்வதை குற்றம் என கருதுகின்றது. இதுபோலவே ஒருபால் உறவு, விபச்சாரம் போன்றவையும் குற்றமாக தீர்மானிக்கப்படுவதில் மாறுபட்ட கருத்துக்கள் சமூகங்களிடையே காணப்படுகின்றன.

இஸ்லாமிய அறிஞர்கள் குற்றம் பற்றிய எண்ணக்கருவை பல்வேறு மொழியமைப்பில் விளக்கிய போதும் அவற்றின் சாரம் ஒன்றாகவே காணப்படுகிறது. "ஹத் (வரையறுக்கப்பட்ட குற்றங்களுக்கான) தண்டனையைக் கொண்டோ அல்லது த.'ஸீர் (வரையறுக்கப்படாத குற்றங்களுக்கான) தண்டனையைக் கொண்டோ அல்லாஹ்வால் தடுக்கப்பட்ட ஷரீஆ ரீதியான தடைகள் குற்றங்கள்" எனப்படும். ஷரீஆ ரீதியான தடைகள் என்பது குறிப்பிட்ட விடயம் தடை செய்யப்பட்ட செயலைச் செய்தல் அல்லது ஏவியதொரு செயலைச் செய்யாது விடல் என்ற விடயங்களை உள்ளடக்கியிருப்பதோடு அது சட்ட அங்கீகாரமும் பெற்றிருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது (அய்யூப், 2001).

**02.குற்றச் செயல்களின் வகைகள் (Types of Crime)**

குற்றச் செயல்களை பொதுவாக இருவகைப்படுத்தலாம்.

**அ. பாரதூரமான குற்றங்கள் (Felonies)**

கொலை, வல்லுறவு, கொள்ளை, வன்முறை, முரட்டுத்தனமான தாக்குதல் போன்ற குற்றங்கள் இப்பிரிவினுள் வருகின்றன. இக்குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை, சிறைத்தண்டனை, அதிக தண்டப்பணம் போன்ற தண்டனைகள் வழங்கப்படுகின்றன (சிபானி, 2010).

**ஆ. பாரதூரமற்ற குற்றங்கள் (Misdemeanors)**

பாரதூரமான குற்றங்களை விட இக்குற்றங்கள் வினைமை (Serious) குறைந்தவை. இக்குற்றங்களுக்கு தண்டப்பணம் மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான சிறைத் தண்டனை

போன்ற தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. உடலில் காயம் ஏற்படும்படியான தாக்குதல், வீட்டு வன்முறை, போக்குவரத்துக் குற்றங்கள், திருட்டு, சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை வைத்திருத்தல் போன்றவை இவற்றுக்கு உதாரணங்களாகும்.

சட்டத்தைப் பொறுத்தவரையில் குற்றம் இரு வகையாக நோக்கப்படுகின்றது.

**அ. சிவில் சட்டம் (Civil law)**

இது தனிமனிதனுக்கு அல்லது தனியார் நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஆராய்கிறது. அவதூறு, ஒப்பந்தத்தை மீறுதல், காயம் அல்லது மரணத்தை தோற்றுவிக்கும் படியான அலட்சியம், சொத்து சேதம் போன்றவற்றை இதற்கு உதாரணமாக கூறலாம்.

**ஆ. குற்றவியல் சட்டம் (Criminal law)**

பொதுமக்கள், சமுதாயம், அரசாங்கம் போன்றவற்றுக்கு எதிரான குற்றமாக இது கருதப்படுகின்றது. எனினும் இதனால் உடனடியாக பாதிக்கப்படுவது தனிநபர்கள்தான். கொலை, தாக்குதல், குடிபோதையில் வாகனத்தை ஓட்டுதல் போன்றவை இவற்றுக்கு உதாரணங்களாகும்.

சமூகவியலாளர்கள் குற்றத்தின் வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு வன்முறைக் குற்றம் (Violent crime), சொத்துக் குற்றம் (Property crime), உயர் அதிகாரிகள் செய்யும் குற்றங்கள் (White collar crime), அரசியல் குற்றம் (Political crime), பாதிப்பற்றோர் குற்றம் (Crime without victims), ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் (Organized crime) எனப் பிரிக்கின்றார்கள் (சுலீவன், 2016).

மனிதன் புரியக் கூடிய குற்றங்களை இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு பிரிக்கின்றார்கள் (அக்ரம், 2011).

அ. தண்டனைகள் வரையறுத்துக் கூறப்பட்ட குற்றங்கள் (ஜராஇமுல் ஹுதூத்)

விபச்சாரம், அவதூறு கூறுதல், களவு, மது அருந்துதல், பெரிய களவு, வழிப்பறிக் கொள்ளை போன்வற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆ. பழிவாங்குதல் அதாவது கொலைக் குற்றம் (ஜராஇமுல் கியாஸ்)

இ. அல்குர்ஆனிலோ, சுன்னாவிலோ குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும் வரையறுக்கப்படாதவை (ஜராஇமுல் த∴ஸீர்)

ஈ. சத்தியம் செய்தல் (ஜராஇமுல் கப்பாரா)

**03. தண்டனை**

நீதியும் தண்டனையும் ஆரோக்கியமான ஒரு சமூகத்தில் இருக்க வேண்டிய அடிப்படையான முறைமைகள். இவை இரண்டும் இரு வேறுபட்ட கூறுகள் அல்ல. நீதியின் பிரயோக வடிவமே தண்டனையாகும். ஒரு சமூகத்தில் நீதியும் அதன்படியாக எழும் தண்டனையும் மழுங்கிப்போகும் போது அச்சமூகம் உடைவை நோக்கி இழுக்கப்பட்டு விடும்.

வேறுபட்ட நபர்களால் கால சூழலை அடிப்படையாகக் கொண்டு தண்டனை எனும் சொல்லாடல் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. ''ஒருவர் செய்த பிழையை அல்லது குற்றத்தை அவர் மீண்டும் செய்யாதிருக்கும் பொருட்டு அப்பிழையின் அல்லது குற்றத்தின் நிமித்தம் அவருக்கு வழங்கும் கசப்பான அனுபவமே தண்டனையாகும்'' (ஞானகுமரன், 2012) என சில அறிஞர்கள் வரையறுக்கின்றார்கள்.

தண்டனை எனும் எண்ணக்கரு பின்வரும் ஐந்து விடயங்களை உள்ளடக்கியிருப்பதாக கூறப்படுகின்றது.

அ. ஒருவனை தண்டிக்கும் போது அவனை துன்புறுத்துவதாக அமைகின்றது.

ஆ. சட்டத்தை மீறுகின்ற செயல் குற்றமாகும். இக்குற்றத்திற்கு வழங்கப்படுவது தண்டனையாகும்.

இ. தண்டனை வழங்குபவர் சமூகத்தில் ஓர் அங்கத்தவராக இருக்க வேண்டும். ஆனால் அவர் குற்றவாளியாக இருக்கக் கூடாது.

ஈ. குற்றத்தை தீர்மானிப்பதற்கும், தண்டனையை தீர்மானிப்பதற்கும் சட்டத்திற்குட்பட்ட அதிகாரம் இருக்க வேண்டும்.

உ. குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டவர் தண்டிக்கப்படுகிறார்.

அனைத்து செயல்களும் ஏலவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டன எனவும் செயல்களுக்கு எவ்விதத்திலும் மனிதர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என நிர்ணயவாதிகளும் (Determinist) அனைத்து செயல்களும் இறைவனால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுவதால் அதன் பிரகாரமே செயல்கள் அமைகின்றன என முன்னியவாதிகளும் (Predeterminist) கூறுகின்றனர். அனைத்தும் ஏலவே விதிக்கப்பட்டதென்றும் விதி, ஊழ் என்ற வகையில் அச்செயல்களுக்கு மனிதர்கள் பொறுப்பற்றவர்கள் என விதிவாதிகள் (Fatalist) விளக்குகின்றனர். நிர்ணயவாதிகள், முன்னியவாதிகள் மற்றும் விதிவாதிகள் மனிதனின் செயல்கள் ஏற்கனவே விதிக்கப்பட்டதென்றும் மனிதன் வெறும் கருவி மட்டும் என கூறுகின்றனர். கருவியாய் இருந்தவர்களுக்கு தண்டனை வழங்குவது எவ்வகையிலும் பொருத்தமற்றது என்பது இவர்களது வாதமாகும் (ஞானகுமரன், 2012).

இதற்கு மாற்றமாக மனிதனின் செயல்களுக்கு அவனே காரணம் என நிர்ணயமற்றவாதிகள் (Indeterminist) சுட்டிக்காட்டுகின்றார்கள். அவரவர் குற்றங்களுக்கு ஈடுபட்டவரே பொறுப்பு என்பது இஸ்லாத்தினதும் நிலைப்பாடாகும். கடலிலும், கரையிலும் குழப்பங்கள் தோன்ற மானிடர்களே காரணம் என அல்குர்ஆன் கூறுகின்றது (அர்றூம்: 41).

தண்டனையை மனித குலத்திற்கெதிரான செயலாகப் பார்க்கின்ற சிந்தனையாளர்களும் இருக்கின்றார்கள். ஜெரமி பென்தாம் ''எல்லாத் தண்டனைகளும் தீங்கானது (Jeremy Bentham) எல்லாத் தண்டனைகளும் தன்னில் கெடுதியானது'' எனக் கூறுகின்றார். ஒவன்

(Oven) ஒரு சூழலில் நிகழ்ந்த செயலுக்கு பிறிதொரு சூழலில் தண்டனை வழங்குவது நீதியற்ற செயல் என குறிப்பிடுகின்றார். மகிழ்ச்சியற்றதும், பயன்பாட்டிற்கு (Utility) எதிர்மறையானதுமானதொரு சூழலைத் தோற்றுவிப்பதனால் தண்டனையை பயன்பாட்டுவாதிகள் (Utilitarian) தீங்கானதாகப் பார்க்கின்றார்கள் (ஞானகுமரன், 2012).

செயற்பாட்டுவாதிகள் (Functionalists) தண்டனையின் அவசியத்தை வலியுறுத்துகின்றார்கள். குற்றச் செயல்கள் ஒரு சமூகத்தின் சீரான இயக்கத்தையும், தொழிற்பாட்டையும் ஒழுங்கையும் ஆட்டங்காணச் செய்கின்றன. இந்நிலையிலிருந்து சமூகத்தைப் பாதுகாத்து இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தண்டனை அவசியம் எனும் கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள்.

இஸ்லாமும் தண்டனையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. தண்டனை மூலம் சமூக நீதியும் ஸ்திரத்தன்மையும் பாதுகாக்கப்படுவதாக கூறுகின்றது. தண்டனையை அருளாகவும் அவற்றில் வாழ்வு இருப்பதாகவும் (அல்-பகறா: 179) எடுத்தியம்புகின்றது.

தண்டனை வழங்கப்படுவதற்கான ஐந்து நியாயங்களை குற்றவியல் சட்டம் (Criminal law) முன்வைக்கின்றது.

### அ. தடுப்பு (Deterrence)

பொதுமக்களையும் குற்றவாளியையும் அச்சுறுத்துவதன் மூலம் எதிர்கால குற்றச்செயல்களை தடுப்பது இதன் நோக்கமாகும். குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை குறிப்பிட்ட நபரை மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதிலிருந்து தடுப்பதோடு குற்றச் செயல்களில் ஈடுபட்டால் இதே தண்டனையே நமக்கும் கிடைக்கும் எனும் உணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துகின்றது.

### ஆ. இயலாமை (Incapacitation)

குற்றவாளியை சமூகத்திலிருந்து தூரப்படுத்துவதன் மூலம் எதிர்கால குற்றச் செயல்கள் தடுக்கப்படுகின்றன. சிறைவாசம், வீட்டுக் காவல், மரணதண்டனை போன்றவற்றை இதற்கு உதாரணமாக கூறலாம்.

### இ. புனர்வாழ்வு (Rehabilitation)

புனர்வாழ்வு, குற்றவாளியின் நடத்தையை மாற்றுவதன் மூலம் எதிர்கால குற்றச் செயல்களைத் தடுக்கின்றது. கல்வியூட்டல், தொழிற்பயிற்சி வழங்குதல் போன்றவை இவற்றுக்கு உதாரணங்களாகும்.

### ஈ. பழிவாங்குதல் (Retribution)

குற்றவாளிக்கு எதிரான பழிவாங்கும் எண்ணத்தை அகற்றுவதன் மூலம் எதிர்காலக் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன. குற்றவாளி உரிய முறையில் தண்டிக்கப்பட்டுவிட்டான்

என்பதனை பாதிக்கப்பட்டவர்களும் சமூகமும் அறியும் போது குற்றச் செயல்கள் தொடர்வதற்கான சூழல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**உ. நஷ்ட ஈடு (Restitution)**

குற்றவாளி நிதி ரீதியாக தண்டிக்கப்படும் போது எதிர்காலக் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன. உடற்காயம், சொத்து இழப்பு, உணர்வு ரீதியான துன்புறுத்தல் போன்ற குற்றச் செயல்களுக்கு குற்றவாளி நஷ்ட ஈட்டை செலுத்தும் போது குற்றங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**04.தண்டனைக் கோட்பாடுகள்:**

**அ. தடுதண்டனைக் கொள்கை (Deterrence punishment)**

தடுதண்டனை என்பது குற்றவாளி மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. குற்றவாளி தண்டிக்கப்படும் போது அவரைப் பார்த்து 'இதே தண்டனையே எமக்கும் கிடைக்கும்' எனும் உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஏனையவர்களும் திருந்தி நடக்கலாம் என இத்தண்டனையை ஆதரிப்போர் கூறுகின்றார்கள். தண்டனை பகிரங்கமாக வழங்கப்பட வேண்டும் என இக்கோட்பாடு கூறுகின்றது. அவ்வாறு வழங்கப்படுவதன் மூலம் ஏனையவர்களும் படிப்பினை பெறலாம் (அய்யூப், 2001). ஒரு பயப்பீதியை ஏனையோருள் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டது இக்கோட்பாடு. பாடசாலையில் ஆசிரியர்கள் வழங்கும் பொதுமேடைத் தண்டனை (Public canning), மின் கம்பத் தண்டனை (Light post punishment), அரேபிய நாடுகளில் குற்றவாளிகளுக்கு பகிரங்கமாக வழங்கப்படும் தண்டனை, மலேசியா போன்ற நாடுகளில் வழங்கப்படும் கசையடிகள் இதற்கு உதாரணங்களாகும் (ஞானகுமரன், 2012).

இஸ்லாமிய அறிஞர்களும் இந்நோக்கத்தின் அடிப்படையில் தண்டனை வழங்குவதை ஏற்கின்றனர். விபச்சாரம் செய்தவர்களுக்கான தண்டனை பற்றி அல்குர்ஆன் சொல்லிவிட்டு:

"அவ்விருவருக்கான தண்டனையையும் மு∴மின்களில் ஒரு கூட்டம் நேரில் பார்க்கட்டும்" (அந்நூர்: 02).

என்று குறிப்பிடுவதனை அவர்கள் ஆதாரமாகக் காட்டுகின்றனர். நேரிலே தண்டனையைப் பார்க்கின்றவர்களுக்கு ஏற்படும் பீதி, குற்றச் செயல்களில் ஈடுபடும் மனோ நிலையிலிருந்து தங்களை விலகிக் கொள்ளும் சூழலை ஏற்படுத்துகின்றது (அய்யூப், 2001).

**ஆ. பழிக்குப்பழி வாங்கும் தண்டனைக் கொள்ளை (Retribution)**

குற்றவாளியை குற்றம் செய்யாமல் தடுப்பதற்கோ அல்லது அவனை சீர்படுத்துவதற்கோ அன்றி பழிவாங்குவதை அடிப்படையாகக் கொண்டு குற்றவாளி செய்த அதேயளவு துன்பத்தை அவனை அனுபவிக்கச் செய்கின்றது இத்தண்டனை முறை. இந்தவகையில் பல்லுக்குப்பல், உயிருக்கு உயிர் என்ற அடிப்படையில் தண்டனை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது (றவூப், 2008).

மோஸஸின் விதியில் (Law of Moses) ''பல்லுக்குப் பல்'', ''கண்ணுக்கு கண்'' எனும் கருத்து சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோல் மனுதர்ம சாஸ்திரமும் குற்றச் செயல்களின் தன்மைக்கேற்ப தண்டனை வழங்கப்பட வேண்டுமென்பதில் கடும்போக்கினை கடைபிடிக்கின்றது (ஞானகுமரன், 2012).

இத்தண்டனைக் கொள்கையை இஸ்லாமிய குற்றவியல் சட்ட ஒழுங்கில் ஜராஇமுல் கியாஸ் எனும் பிரிவில் காணலாம். ஜராஇமுல் கியாஸ் என்பது பழிவாங்குவதைக் குறிக்கின்றது (அய்யூப், 2001).

''அவர்களுக்காக அதில் உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண், மூக்கிற்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்கு பல் என காயங்களுக்கு பழிவாங்குமாறு விதித்திருந்தோம். எனினும் யாரும் பழிவாங்குவதை தானாய் மன்னித்துவிடின் இது குற்றத்திற்கு பரிகாரமாகும்'' (அல் மாயிதா: 45).

அநீதி இழைக்கப்பட்டவனின் அதேயளவு துன்பத்தை குற்றவாளியும் பெற வேண்டும் எனும் கருத்தை மேலே சுட்டிக்காட்டிய அல்குர்ஆன் வசனம் எடுத்தியம்புகின்றது. எனினும் குற்றமிழைக்கப்பட்டவன் மன்னித்துவிட்டால் அதனையும் இஸ்லாமிய தண்டனை முறை ஏற்கின்றது.

### இ. தடுத்தல் தண்டனைக் கொள்கை (Preventive)

குற்றவாளியிடமிருந்து சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் கருத்தின் அடிப்படையில் இக்கொள்கை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இங்கு தண்டனையானது ஒற்றுமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் வழங்கப்படுகின்றது.

குற்றம் செய்த ஒருவர் மீண்டும் அக்குற்றத்தைச் செய்ய முடியாத நிலையில் வைக்கப்பட வேண்டும். திருடியவனை சிறையில் அடைக்கும் போது திருடும் வாய்ப்பு அவனுக்கு இல்லாமல் போகின்றது. நச்சுப் பாம்பை நாம் ஏன் அடித்துக் கொல்லுகின்றோம்? அதை உயிருடன் விட்டால் நம்மைக் கடித்து விடும் என்பதால்தான். இந்த அடிப்படையிலேயே கொலைக் குற்றம் செய்தவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது. இதன் மூலம் மீண்டுமொரு கொலை அல்லது படுகொலை தடுக்கப்படுகின்றது. பயிருக்கு களையெடுப்பது போல் சமுதாயம் எனும் பயிரைப் பாதுகாக்க குற்றவாளிகள் களையெடுக்கப்படுகின்றார்கள் (றியால், 2018).

குடும்ப வாழ்வை சிதைக்கும் நடவடிக்கைகளில் விபச்சாரம், கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறுதல் போன்றனவும் அடங்கும். இத்தகைய குற்றச் செயல்களுக்கான தண்டனையை வழங்குவதன் மூலம் குடும்ப வாழ்வில் ஒற்றுமையையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த முனையும் இஸ்லாமிய நடைமுறை தடுத்தல் தண்டனை கொள்கைக்கு உதாரணமாகும்.

### ஈ. சீர்திருத்த தண்டனைக் கொள்கை (Reformation)

குற்றமிழைத்தவரின் ஒழுக்கத்தை சீர்படுத்த முனைவதுதான் இத்தண்டனைக் கொள்கையின் நோக்கமாகும். குற்றவாளி யதார்த்தத்தில் நோயாளி. அவன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்நோய் உள, உடல், மூளை சார்ந்ததாக இருக்கலாம் என இக்கொள்கை விபரிக்கின்றது. கல்வியூட்டல், மன்னிப்பை வழங்குதல், தண்டனையைக் குறைத்தல் போன்றவற்றை குற்றவாளிகளுக்காக செய்வதோடு குற்றமிழைக்கக் காரணமான வறுமை நிலை, அறியாமை, குற்றச் சூழல், கெட்ட நண்பர்களின் சகவாசம், தீய பழக்கவழக்கங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் இக்கொள்கை பரிந்துரை செய்கிறது (அய்யூப், 2001).

இஸ்லாமிய குற்றவியல் சட்டத்தில் காணப்படும் த.்.ஸீர் குற்றங்களுக்கான தண்டனைகள் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. புத்தி சொல்லி எச்சரித்தல், கண்டித்தல், சிறைத்தண்டனை வழங்குதல் போன்றவை தண்டனைகளாக வழங்கப்படுகின்றன. இக்குற்றங்களுக்கான தண்டனைகள் வழங்கப்படும் போது சமூக சூழலும், குற்றம் செய்தவரின் மனோ நிலையும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இஸ்லாமிய வரலாற்றில் தபூக் யுத்தத்தில் கலந்து கொள்ளாத சிலரை பகிஷ்கரித்து வைக்கும் தண்டனை முறையை நபிகளார் அறிமுகப்படுத்தினார்கள் (அக்ரம், 2011). இத்தகைய தண்டனை வழங்கப்படுவதன் மூலம் குற்றவாளி சீர்திருந்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

இங்கு உடல் ரீதியான துன்பம் ஏற்படா விட்டாலும் அவன் திருந்துவதற்கு உள ரீதியான துன்பம் ஏற்படுத்தப்படுகின்றது. சிறை வாழ்வு, தனிமை, எதிர்கால வாழ்க்கை குறித்த கவலை, சுதந்திரம் மற்றும் ஆசைகள் கட்டுப்படுத்தப்படல் போன்ற பல விடயங்கள் அவனுள் மாறாத காயங்களை உண்டுபண்ணி குற்றவாளி திருந்தி நடப்பதற்கான வாய்ப்புகளை இத்தண்டனை ஏற்படுத்துகின்றது (றியால், 2008).

திறந்தவெளிச் சிறைச்சாலைகள், நன்னடத்தை நிலையங்கள், பெண்கள் நன்னடத்தை நிலையங்கள், சிறுவர் நன்னடத்தை நிலையங்கள் போன்றவை அமைக்கப்பட்டு குற்றவாளிக்கான சீர்திருத்தம் நடைபெறுகின்றது. இங்கு குற்றவாளியை சீர்திருத்தல் எனும் வகையில் அவனை மன்னிப்பது, அவனுக்கு கல்வியறிவு புகட்டுவது, அன்பாக நடந்து கொள்வது, சிறைச்சாலையில் போதிய சௌகரியம், தண்டனைக் குறைப்பு போன்றவற்றை சீர்திருத்தக் கோட்பாட்டாளர்கள்ஏற்றுக் கொள்கின்றனர் (ஜமாஹிர், 2012).

## முடிவுரை

சமூக இடைவினை கொண்ட மனிதர்கள் குற்றச் செயல்களிலிருந்து விலகியிருப்பது சாத்தியமில்லை என்பது சமூகவியலாளர்கள் கருத்து. தண்டனை வழங்கப்படாமல் குற்றவாளி வெறுமனே விடப்படுவது சமூகத்தை அழித்து விடும் கைங்காரியங்களில் ஒன்று. எனவே குற்றச் செயல்களுக்கான தண்டனை வழங்கப்படுவது அவசியமான ஒன்றாகும். வெவ்வேறுபட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தண்டனைகள் வழங்கப்படுவதை தண்டனைக் கோட்பாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. அந்நோக்கங்களோடு இஸ்லாமிய சிந்தனையும் இணங்கிப் போவதை இவ்வாய்வு சுட்டிக் காட்டுகின்றது.

**உசாத்துணை**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூகவிஞ்ஞானங்கள் துறை, இலங்கைதென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. அய்யூப், எஸ். எம். (2001). தண்டனைக் கோட்பாடுகள். *அல் ஜாமிஆ*, இதழ் 03, 39 – 42.
3. அக்ரம், எம். (2011). *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்.* கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.
4. றவூப் செயின். (2008). *கலாச்சார ஏகாதிபத்தியம், உலகமயமாதல் - இஸ்லாம்.* திஹாரி: சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னுகல்தூன் ஆய்வகம்.
5. றியால், ஏ. எல். எம். (2018). குற்றமும் தண்டனையும், *Journal of Social Review*, 5 (1), 35 – 55.
6. சிபானி, பாத்திமா. (2010). *சமூகப் பிரச்சினைகள்: பாகம் ஒன்று.* கண்டி: சிந்தனை வட்டம்.
7. சிங்கார வேலனார். (2001). *குற்றமும் தண்டனையும்.* சென்னை: கமலா பதிப்பகம்.
8. ஞானகுமரன், நா. (2012). *மெய்யியல்.* கொழும்பு: சேமமடு பதிப்பகம்.
9. ஜமாஹிர், பீ. எம். (2012). *ஒழுக்கவியல்: ஓர் அறிமுகம்.* கண்டி: ஈஸ்வரன் புக் டிப்போ.
10. சண்முக சுப்ரமணியம், மா. (1995). *குற்ற இயல் சட்டம்.* சைவ சித்தாந்த நூல் பதிப்பு நூற்பதிப்புக்கழகம்.
11. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.
12. Haralambos and Holborn, (2000). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.
13. Johnson, Harry, (1999). *Sociology:  A Systematic Introduction.* New Delhi:. Aliede Publishers.
14. Rao Sankar, (2007). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.

15. Sullivan, T. J. (2016). *Introduction to Social Problems*. USA: Pearson.